O.S.No.51/2002

Dated : 02.11.2022.

Time:   4.09  P.m. To 4.40     P.m.

P.W. - 1 சாட்சி சத்தியபிராமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு

**1** மற்றும் **3** பிரதிவாதி   சார்பாக  குறுக்குவிசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.9 26.05.1971ல் எழுதப்பட்டது. அது கணபதி கவுண்டர், சாமிகவுண்டர், ராமசாமிகவுண்டர், மற்றும் பழனிவேல் ஆகியோர் எழுதிக்கொண்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் ஆகும். அவர்களுடைய சொத்து குறித்து தான் பாகம் ஏற்படுத்திகொண்டார்கள். அதில் கண்டுள்ள மொத்த சொத்துக்கள் 5 ஏக்கர் 13 செண்ட் என்றால் சரிதான். மேற்படி பாகத்தில் தொகை எதுவும் பெறவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது மாமனார் கணபதிக்கு ராசிபுரம் வட்டம், சிங்களாந்தபுரம் கிராமத்தில் 5 ஏக்கர் நிலம் இருந்ததாக சொல்வதும் அதை அவர் 1952ல் ரூபாய் 3 ஆயிரத்திற்கு கிரையம் செய்துவிட்டாதாக கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. மேலும் அந்த பணத்தை கொண்டு வேப்பநத்தத்தில் கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

மேலும் என் மாமனார் வேப்பநத்தத்தில் எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் அது பொய். மேற்படி கிரையத்தை காண்பிக்க எந்த ஆவணமும் நான் முன்நிறுத்தவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. வேப்பநத்தம் கிராமத்தில் உள்ள புலஎண்.34/2 கீழ் உள்ள 4 ஏக்கர் 11 செண்ட் நிலத்தை என் மாமனார் கிரையம் வாங்கிவில்லை என்றும் அதை அவருக்கு அரசாங்கம் டிகார்டு பட்டா மூலம் கொடுத்தது என்றால் அது தவறு. மேற்படி சொத்து கணபதிகவுண்டரின் தனிப்பட்ட சொத்து என்றால் அது தவறு அது கூட்டுகுடும்ப சொத்து. மேற்படி கணபதிகவுண்டருக்கு அவரின் கூட்டுகுடும்ப சொத்து விடுதலை செய்த வகையில் எவ்வித சொல்லிக்கொள்ளும்படியான தொகை கிடைக்கவில்லை என்றால் தவறு தொகையை பெற்றுக்கொண்டு தான் பின்பு சொத்து வாங்கினார். அவருக்கு வந்த ரூபாய் 500ம் அவர் கடனுக்கே போதவில்லை என்றால் அது தவறு. மூதாதையர் சொத்து வருமானத்தை கொண்டு கணபதிகவுண்டர் அவர்பெயரிலும், அவர் மனைவி பெயரிலும் சொத்து வாங்கினார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

ஊனத்தூா் கிராமத்தில் கணபதி பெயரில் பெறப்பட்ட சொத்துக்குண்டான கிரையதொகையை அவரது மனைவி கனகமும், கனத்தின் பெற்றோரும் தான் கொடுத்தார்கள் என்றால் தவறு அது கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து வாங்கப்பட்டது. 1ம் இனசொத்தில் உள்ள கோழிபண்ணைக்கு கனகம் பெயரி சூட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. 1ம் இன சொத்து ஊனத்தூரில் உள்ளது என்றும் அதில் தான் கோழிபண்ணை உள்ளது என்றால் இரண்டு இடத்திலும் உள்ளது. மேற்படி கோழிப்பண்ணை கனகத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தான் உள்ளது என்றால் அது தவறு. தாவா 1ம் அயிட்ட சொத்துக்கள் கூட்டுகுடும்பசொத்துக்கள் அல்ல அது கணபதி மற்றும் கனகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது தவறு அது கூட்டுக்குடும்ப சொத்து. 4ம் இன சொத்தும் கனத்தின் தனிப்பட்ட சொத்து என்றால் அது தவறு.

மும்முடி கிராமத்தில் உள்ள தாவா 3ம் இன சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளால் அவர்களின் தந்தைக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட 34/1ல் உள்ள நிலத்தின் ஒருபகுதியை பெரியக்காலுக்கு விற்று அதில் கிடைத்த வருமானத்தையும், 1மற்றும் 2 பிரதிவாதிகளின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு பெறப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் அது தவறு அதுவும் கூட்டுக்குடும்ப சொத்துதான். 3ம் பிரதிவாதி கனகத்தின் பெயரில் உள்ள சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்து என்பதால் 1,2 பிரதிவாதிகளுக்கு அதில் எ்வ்வித பாகமும் இல்லை என்றால் அது தவறு. மேலும் மேற்படி கோழிப்பண்ணைக்கு பலவங்கிகளில் கடன் வாங்கப்பட்டது என்றால் சொத்து இருந்தால் தான் கடன் கொடுப்பார்கள். நான் சொல்வது போன்று கூட்டுகுடும்ப சொத்து வருமானத்தில் இருந்து எவ்வித சொத்துக்கள் வாங்கப்படவில்லை என்றும், தாவா சொத்துக்களின் எந்த பகுதியும் கூட்டுக்குடும்ப சொத்துகள் அல்ல என்றும் அதனால் வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித பாகமும் கேட்கும் அறுகதை இல்லை என்றால் அது தவறு. எனவே 1,2 பிரதிவாதிகளுக்கு தலா 9ல் 4பாகமும், 3ம் பிரதிவாதிக்கு 9ல் 1 பாகமும் உள்ளது என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

மேற்படி கணபதிகவுண்டரின் சகோதரி தாயாம்மாளின் திருமணத்திற்கு பெற்ற கடனை செலுத்தமுடியாமல், வாழவழியில்லமல் தான் வாழ்க்கை தேடி கணபதி கவுண்டர் 1960 ஆண்டு வாக்கில் ஊனத்தூர் வந்து மணியக்காரர் சுப்பரமணியிடம் பண்ணையாளாக வேலை செய்து குத்தகைாரராக இருந்து வந்தார் என்றால் அது தவறு. 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொதத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் 1 ,2 பிரதிவாதிகளுக்கு அவர் எழுதிவைத்த தானப்பத்திரம் செல்லக்கூடியது என்றால் அது சரியல்ல. எனவே அந்த சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவாதள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd- K.Ananthan,**

**Subordinate Judge,**
**Attur.**